DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Cr.P.C/XXV BNSS)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, KUMBAKONAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C No. 93/2023 |
| Deposition of witness | : | PW-6 |
| Name | : | சுப்பிரமணிய சிவா |
| Father's /Husband Name | : | சவுரிராஜன் |
| Village | : | திருபாச்சிபுரம் |
| Taluk | : | வலங்கைமான் |
| Age | : | 43 |
| Occupation | : | **பெட்ரோல் பங்க் வேலை** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 12th day August 2024.
Accused A1, A2 present.

**முதல் விசாரணை:-**

நான் சாக்கோட்டை NAH பெட்ரோல் பங்கில் பம்ப் வேலை செய்து வருகிறேன். அ.சா.2, அ.சா.3, அ.சா.4, அ.சா.5 ஆகியோர் என்னுடன் பணிபுரிந்தவர்கள். எங்கள் பெட்ரோல் பங்கில் சாமிநாதன் மெக்கானிக். இவ்வழக்கில் இறந்துபோன பிரபு பேருந்து கிளினர் எனக்கு தெரியும். 2022ம் தேதி 7வது மாதம் இரவு சுமார் 12.00 மணிக்கு மேல் நான் பணியை முடித்துவிட்டு தூங்க சென்றபோது சத்தம் கேட்டு வந்து பார்த்தேன். பேருந்தின் தென்புறத்தில் கட்டை ஓரமாக பிரபு இரத்தகாயத்துடன் கிடந்தார். என்னவென்று விசாரித்தபோது TN 49 AY 1414 பேருந்தை பின்னால் எடுக்கும்போது பிரபு மீது ஏறியதாக கூறினார்கள். அந்த பேருந்தை 1வது எதிரி பின்னால் எடுக்கும்போது 2வது எதிரி பின்னால் வரலாம் என கூறியதாக கூறினார்கள். பிரபு-க்கு கால்களில் காயம் ஏற்பட்டிருந்தது. அவரை 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். அவர் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

சத்தம்கேட்டு வந்து பார்த்தேன் என்றாலும், விபத்து குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரிதான். நான் வந்து பார்த்தபோது கூட்டமாக இருந்தது என்றால் சரிதான். யார் பேருந்தை ஓட்டியது என்று நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். பெட்ரோல் பங்கில் ஓய்வு அறை தனியாக உள்ளது என்றாலும், அதில் ஓய்வு எடுப்போம் என்றாலும் சரிதான். ஆஜர் எதிரிகள் என்னுடன் பணிபுரிந்தவர்கள் என்றால் சரிதான்.

**நீதிமன்ற கேள்வி**

விபத்து ஏற்படுத்திய பேருந்தின் ஓட்டுநர், நடத்துநர் யார் என்றால் 1வது எதிரி ஓட்டுநர், 2வது எதிரி நடத்துநர் ஆவார்கள்.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

Sd./- M. Elavarasi,
Judicial Magistrate No.I,
Kumbakonam.